## தலைப்பு 272 – குருனாகல் மாவட்ட செயலகம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

குருனாகல் மாவட்ட செயலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் குருனாகல் மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குருனாகல் மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத்

தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்

மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) மாவட்ட செயலகத்தால் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) குருனாகல் மாவட்ட செயலகத்தால் திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்குச் சொந்தமான 54 உத்தியோக பூர்வ இல்லங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாவட்ட செயலகத்திற்கும் பிரதேச செயலகங்களுக்கும் சொந்தமான அனைத்து சொத்துக்களும் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். | உத்தியோகபூர்வ இல்லங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்குத் தேவையான காணி உறுதிகளை தேடிக் கண்டு பிடிக்கும் சிக்கலின் காரணமாக மதிப்பீடு செய்வதற்கு முடியாததனால் பெறுமதியை மாத்திரம் கணக்கீடு செய்ய முடியாதுள்ளது. |

### 1.6.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| 2015 யூலை 07 ஆந் திகதிய BD/GPS/130/9/14/MC-II இலக்க தேசிய பாதீட்டு திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | 2014/2015 வரவு செலவுத்திட்ட பிரேரணைகளின் கீழ் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்ட ஓய்வு பெற்றோர், சேவையை கைவிட்டோர் மற்றும் சேவையிலிருந்து விலகிய வெளிக்கள உத்தியோகத்தர்களிடமிருந்து மோட்டார் சைக்கிள்களின் சந்தைப் பெறுமதியை ஒரே தடவையில் அறவீடு செய்ய வேண்டிய போதிலும் குருனாகல் மாவட்ட செயலகத்தின் 09 பிரதேச செயலகங்களின் 15 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 2,154,540 பணம் அறவீடு செய்யப்பட வேண்டியிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அந்த உத்தியோகத்தர்களுக்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கிய நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்.

பின்வரும் அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டின் போது 07 அமைச்சுக்களிடமிருந்தும் 03 திணைக்களங்களிடமிருந்தும் சனாதிபதி செயலகத்திடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 187,886,028 தொகையான நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அது சதவீதமாக 20 சதவீதத்திலிருந்து 79 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாட்டை உச்ச அளவில் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொண்டு மேற்கொள்ள வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்களை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் | கட்டுநிதி இல்லாமையும் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு போதியளவு காலம் இல்லாமையினாலும் இந் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| | நிறைவேற்ற வேண்டும். | |
| (ஆ) 2018 ஆம் ஆண்டின் போது 04 அமைச்சுக்களினால் வழங்கப்பட்ட ரூபா 25,643,094 கூட்டு மொத்தமான நிதி ஏற்பாடு உரிய செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமையின் காரணமாக 100 சதவீதமும் சேமிக்கப்பட்டிருந்ததனால் எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | நிதி ஏற்பாடு வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளை ஆண்டின் போதே நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சாதகமற்ற காலநிலை மற்றும் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு போதியளவு காலம் இல்லாமையின் காரணமாக செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு முடியாதமையால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. மேலும் கைத்தொழில்கள் மற்றும் வணிக நடவடிக்கைகள் அமைச்சின் நிதி ஏற்பாட்டை தொடர்ச்சியான நிதி ஏற்பாடாக சரியாக வழங்காமையும் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லினக் அமைச்சிடமிருந்து 2018 திசெம்பர் 27 ஆந் திகதி நிதி ஏற்பாட்டை பெற்றுக்கொண்டமையும் கட்டுநிதி இல்லாமையுமே இதற்கு காரணமாக இருந்தது. |

### 2.2 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபார்சு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| 02 ஆண்டுகளுக்கு மேல் காலங் கடந்த ரூபா 47,903,631 பெறுமதியான வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 574 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலங்கடந்த வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | திறைசேரியிடமிருந்து போதியளவு கட்டுநிதி கிடைக்காமையால் நிறுத்தி வைத்தல்களை விடுவிக்க முடியாதிருந்தது. தற்பொழுது பிரதேச செயலகங்களில் 2017 ஆம் ஆண்டு வரை காலாவதியான வைப்புக்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. |

### 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த விளைவுகளைப் (Out come) பெற்றுக்கொள்ளாமை.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபார்சு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| (அ) சமுர்த்தி நலன்பெறுனர்களை வலுப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் கொபேகனே பிரதேச செயலகப் பிரிவில் 2014, 2015, 2016, மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அமுல்ப்படுத்தப்பட்ட அரசாங்க பங்களிப்பு ரூபா 324,824 | செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்ட பின்னர் அவை சம்பந்தமாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொண்டு வெற்றிகரமான | வெற்றியளிக்காத செயற்திட்டங்களை மீண்டும் வெற்றிகரமான நிலைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | தொகையான 23 செயற்திட்டங்கள் வெற்றியளிக்காத நிலையில் காணப்பட்டன. | நிலைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | |
| (ஆ) | 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 2,979,800 செலவு செய்து கனவத்தை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள திவுல்வெவ மற்றும் கெகுலாவல கிணறுகளை புனரமைத்தல், நீரை சேகரிக்கும் தாங்கிகளை நிர்மாணித்தல், கிணற்றை சுற்றி வேலி நிர்மாணித்தல், நீர் பம்பிகளுக்கு வயரிங் செய்தல், ஆகிய வேலைகள் நிறை வேற்றப்பட்டிருந்தன. எனினும், இச் செயற்திட்டத்தின் எஞ்சிய வேலைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான 02 நீர் மோட்டார்கள் மற்றும் நீர்க் குழாய்களுக்குத் தேவையான ரூபா 3,141,715 நிதி ஏற்பாடு இல்லாமையால் செயற்திட்டத்தின் எதிர்பார்த்த குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்திற்காக அரசாங்கத்தின் பணத்தை செலவு செய்யும் போது உச்ச அளவு விளைதிறன் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்பொழுது தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. எஞ்சிய நிதி ஏற்பாட்டின் மூலம் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |
| (இ) | தெயட கிருல தொடர்ச்சியான செயற்திட்டத்தின் கீழ் ரூபா 50,262,908 செலவு செய்து இப்பாகமுவ நகர மண்டபத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 2017 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டு பொது மக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டது. | அரசாங்கத்தின் பணம் செலவு செய்யப்பட்ட செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்து அவற்றை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொண்டு செயற்திட்டங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை அடைந்து கொள்ளுதல் வேண்டும். | நகர மண்டபத்தை பிரதேச சபையிடம் ஒப்படைப்பதற்காக 2019 ஏப்ரல் 03 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அமைச்சின் ஆலோசனைகள் வேண்டப்பட்டுள்ளது. |
| (ஈ) | தெயட்ட கிருல அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாவத்தகம வாராந்த சந்தைக்காக ரூபா 50,391,654 கூட்டு மொத்தப் பணம் செலவு செய்து வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தும் 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை விளைவற்றுக் காணப்பட்டது. | அரசாங்கத்தின் பணத்தை செலவு செய்து செயற்திட்டத்தை பூர்த்தி செய்து அவற்றை பயன்பாட்டிற்கு எடுத்துக் கொண்டு செயற்திட்டத்திலிருந்து | 2017 நிதி ஆண்டு முடிவின் போது தொடர்ச்சியான நிதி ஏற்பாடு இல்லை என தெரிவிக்கப்பட்டு எஞ்சிய வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென செயற்திட்டத்தின் வேலைகளை முடிவுறுத்தி 2018 மார்ச் மாதம் பிரதேச |

| | | | |
|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை அடைந்து கொள்ளல் வேண்டும். | சபைக்கு ஒப்படைக்கப்பட்டது. தற்பொழுது காணப்பட்ட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு வராந்த சந்தை வியாபார நடவடிக்கைகளுக்கும் பயன்பாட்டிற்கும் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. |
| (உ) | தெயட்ட கிருல அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இப்பாகமுவ வாராந்த சந்தையின் மின்சார வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக ரூபா 1,223,600 பணத்திற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தும் அந்த வேலைகள் நிறைவேற்றபட்டிருக்கவில்லை. அவ்வாறே 2017 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளின் போது ரூபா 30,980,822 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட இப்பாகமுவ வாராந்த சந்தையின் நுழைவு வீதியானது மழை காலத்தின் போது மழை நீர் நிரம்புதல், வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு இடவசதிகள் இல்லாமை அனைத்து வியாபாரிகளுக்கும் இடம் போதியதாக இல்லாமை ஆகிய குறைபாடுகள் அவதானிக்கப்பட்டதுடன் எதுவித பயன்பாட்டிற்கும் எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டதனால் எதிர்பார்த்த குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தின் பணம் செலவு செய்யப்பட்ட செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்து அவற்றை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொண்டு செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் அடைந்து கொள்ளப்படுதல் வேண்டும். | உரிய திட்டங்களின் பிரகாரம் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. நுழைவு வீதியை உருவாக்குதல் வாகனங்களை நிறுத்தி வைக்கும் வசதிகளை ஏற்படுத்துதல் முதலிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தலானது பிரதேச சபையின் செயற்பாடாகும். |
| (ஊ) | விவசாய அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் விவசாய திணைக்களத்தின் பழவகைகள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் செயற்பாட்டில் மாவட்ட செயலாளரினூடாக மேற்கொள்ளப்பட்ட பழவகைகள் உற்பத்தி கூட்டு தொழில்முயற்சி மாதிரி செயற்திட்டத்தின் கீழ் மாஹோ பிரதேசத்தில் 50 ஏக்கர்கள் பரப்பளவில் பயிர் செய்கை செய்வதற்கு வழங்கப்பட்ட ரூபா 03 மில்லியன் பெறுமதியான 37,500 கெவண்டிஸ் வாழை நாற்றுக்களில் 3,350 நாற்றுக்கள் உரிய தரத்தில் இல்லாததன் காரணமாக அழிவடைந்திருந்தது. ரூபா 4.8 மில்லியன் நிதி ஏற்பாட்டில் | முதலில் நிறைவேற்ற வேண்டிய வேலைகளை ஏற்கனவே நிறைவேற்றி எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | CIC கம்பனியால் வழங்கப்பட்ட அனைத்து வாழை நாற்றுக்களும் நோயற்ற நிலையில் காணப்பட்டன என்பதனை வலியுறுத்துகிறேன். இக் காலப்பகுதியில் நிலவிய அதிக வறட்சி நிலைமையும் அதிக வெப்பமான நிலைமையும் நாற்றுக்கள் இறப்பதற்கு காரணம் என இறுதிதீர்வு காணலாம். விவசாயிகள் நில நீரைப் பாதுகாத்தக் கொள்ளுமாறு விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆலோசனை வழங்கியிருந்தும் பல விவசாயிகள் அதற்காக |

கெவண்டிஸ் வாழைப் பயிர்செய்கைக்கு நீர் தேவைகளை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தும் தெளிக்கும் நீர் முறைமை வழங்கப்படாததன் காரணமாக ரூபா 1.18 மில்லியன் பெறுமதியான 11,800 நாற்றுக்கள் நடப்பட்டிருக்கவில்லை. நிலத்தை தயார்படுத்துதல் மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்காக 09 விவசாயிகளால் ரூபா 5.70 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் பயிர் செய்கைக்குத் தேவையான நீர்த் தேவைகள் பூர்த்தி செய்யப்பட முடியாமையால் பயிர்ச்செய்கையில் காணப்பட வேண்டிய ஆகக் குறைந்த அபிவிருத்தி மட்டம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. விளைச்சலை அறுவடை செய்யததன் பின்னர் விற்பனை செய்வதற்காக பொருத்தமான ஒரு சந்தை அல்லது ஒரு நபர் அல்லது ஒரு நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்து கொள்ளாமையால் எதிர்பார்த்த குறிக்கோள்களை அடைந்து கொள்வதில் சிக்கல்கள் காணப்பட்டது.

நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. முளைக்காத நாற்றுக்கள் இல்லாதிருந்ததுடன் நாற்றுக்கள் வளர்வதுடன் அந்த அறிகுறிகள் இல்லாமல் போய்விடும். CIC நிறுவனத்தினால் வழங்கப்பட்ட நாற்றுக்கள் (மாதிரிகளின் பிரகாரம் 8-24 அங்குலத்திற்கு இடைப்பட்டதும் 4-5 இற்கும் இடைப்பட்ட தண்டுகளும் உள்ளவாறான நாற்றுக்கள்) மாதிரிகளின் பிரகாரம் இல்லாதிருந்தும் வழங்கப்பட்ட நாற்றுக்கள் 4-6 அங்குல உயரமானதாகவும், 3-4 தண்டுகளுடனும் வளர்ச்சியடைந்திருந்தது. எனது அறிவின் படி இந்த அளவுள்ள வாழை நாற்றுக்கள் பொருத்தமான சுற்றாடல் நிலைமையில் பயிரிடுவதன் மூலம் சிறந்த வாழைப் பயிர்ச்செய்கையை பேணக் கூடியதாக இருக்கும். வெற்றியளிக்காத நாற்றுக்களின் அளவு 8.9 சதவீதமாகும். இதற்கு காலநிலை காரணமாக இருந்தது. நிதி ஏற்பாடு தாமதமாக கிடைத்தமையும் கிடைத்த நிதி ஏற்பாடு போதியளவானதாக இல்லாமையும் காரணமாக செயற்திட்டத்தை அமுல்ப்படுத்த வேண்டிய நடைமுறைகள் மற்றும் அது தொடர்பான மாதிரிகள் சம்பந்தமாகக் காணப்பட்ட நிச்சயமற்ற தன்மை இச் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்தாமைக்கான காரணமாகும்.

**3.2 ஏனைய அவதானிப்புக்கள்**

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கனவேத்த பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சீராதுன்ன கிராம உத்தியோகத்தர் பிரிவின் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட வேதெனியகம நீர் செயற்திட்டத்திற்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 497,500 செலவு செய்து நீர் தாங்கி மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் நீர் மோட்டார், பம்பிகள், நீர்க்குழாய் முறைமைகள் என்பன நிர்மாணிக்கப்படாமையால் நிர்மாணிக்கப்பட்ட நீர்த்தாங்கி விளைவற்றுக் காணப்பட்டது. | செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் போது அதில் விளைவுகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் தேவையான நிதி ஏற்பாட்டைப் பெற்று செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழுள்ள பிரேரணையாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | உடுபத்தாவ பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபையால் இணக்கப்பாட்டிற்கு வராததன் காரணமாக 2018 ஆம் ஆண்டில் கிராமிய விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் உடுபத்தாவ பிரதேச செயலகப் பிரிவில் 02 விளையாட்டு மைதானங்களை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட ரூபா 2,151,523 நிதி ஏற்பாடு இரத்துச் செய்யப்பட்டிருந்தது. | பிரதேசத்திற்கு நலன்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் கிடைக்கும் நிதி ஏற்பாட்டிலிருந்து உச்ச அளவு பயனைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது சம்பந்தமாக திறந்த பெறுகை நடைமுறையினைப் பின்பற்றுவதற்கு போதியளவு காலம் இல்லாமை மற்றும் பிரதேச சபையின் இணக்கப்பாடு எச் சந்தர்ப்பத்திலும் பெற்றுக்கொள்ளப்படாமையின் காரணமாக செயற்திட்டத்தை திருத்துவதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வல்லவபிடிய கொடவெஹர பிரதேச செயலகத்தின் 18 கிராம சேவையாளர் பிரிவுகளில் 16 ஏக்கர் 3 ரூட் சொந்தமான காணியும் அக்காணியில் அமைந்துள்ள 13 கட்டிடங்களும் விளைவற்றுக் காணப்பட்டன. | அரசாங்கத்தின் ஆதனங்கள் விளைவற்று இருக்காது பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இக்கட்டிடங்கள் மாவட்ட செயலகத்திற்கு அல்லது பிரதேச செயலகத்திற்கு உரியது அல்லாததனால் கணக்காய்வு ஐய வினாவில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் அந்த நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மல்லவபிடிய பிரதேச செயலகத்திற்குரிய பல்நோக்கு கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக 2011,2012 மற்றும் 2014 ஆம் | அரசாங்கத்தின் ஆதனங்களை முழுமையான பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் | இதில் எஞ்சிய வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு பணம் வேண்டப்பட்டுள்ளது. தற்பொழுது வேலையின் |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுகளில் ரூபா 2,931,038 மொத்த தொகை செலவு செய்யப்பட்டிருந்தும் முழுமையாக வேலையைப் பூர்த்தி செய்வதற்கு முடியாமையால் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. | வேண்டும் | இறுதிப் பகுதியில் கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகளங்கள் பேணப்பட்டு வருகின்றன. |
| (இ) | பொல்பிதிகம பிரதேச செயலகப் பிரிவில் இடர் முகாமைத்துவ அமைச்சரிடமிருந்து 2015 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் பொத்துவில் கிராம உத்தியோகத்தர் பிரிவில் ரூபா 462,638 செலவில் நிர்மாணிக்கப்பட்ட குடிநீர் கிணற்றை மண் நிரப்பி அமுக்கப்படாததனால் குழி ஏற்பட்டுள்ளது. இக் கிணறு நிர்மாணிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டம் உரிய நியமத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. என கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் உறுதிப்படுத்தப்பட வேண்டியது போல சாத்தியவள ஆய்வினை மேற்கொண்டு தேவையான செயற்திட்டங்களை ஆரம்பித்தல் வேண்டும். | இக்குடிநீர் கிணற்றில் காணப்படுகின்ற குறைபாடுகளின் காரணமாக குடிநீர் கிணறாக பயன்படுத்துவதற்கு பொருத்தமற்றதாக உள்ளதுடன் அக்குறைபாடுகளைச் செய்து தருமாறு கமக்காரர் அமைப்பிற்கு செலுத்தப்பட்டுள்ளது. அது வரை நிறுத்தி வைத்தல் பணத்தை கொடுப்பனவு செய்தல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | பொல்பிதிகம பிரதேச செயலகப் பிரிவில் சமுர்த்தி நலனாளிகளின் உற்பத்திப் பொருட்களை களஞ்சியப்படுத்தல் மற்றும் தயாரிப்பதற்கு தேவையான வசதிகள் மற்றும் அந்த உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் குறிக்கோளுடன் ரூபா 300,000 செலவில் 2017 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட விற்பனை நிலையத்திற்கு தேவையான உபகரணங்கள் கிடைக்காமையின் காரணமாக 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள் நிறைவேற்றப்படாது விளைவற்றுக் காணப்பட்டது. | செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் போது மிகுதி செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். | விற்பனை நடவடிக்கைகளுக்காக பொருத்தமான வகையில் அதன் தேவைப்பாடு பூர்த்தியாகும் வரை பிரதேசத்திலுள்ள சமுர்த்தி நலனாளிகளின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் நிலையமாகப் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக பிரதேச செயலாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (உ) | உடுபத்தாவ பிரதேச செயலாளர் பிரிவிற்குரிய சட்டி பானை செய்யும் நிலையத்தின் களிமண் அரைக்கும் இயந்திரம் 05 ஆண்டுகளுக்கு முனனர் வழங்கப்பட்டிருந்தும் அக்காணி அரசாங்கத்திற்கு ஒப்படைக்கப்படாததன் காரணமாக தேவையான மின்சார வழங்கலைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாமையால் இந்த இயந்திரம் விளைவற்றுக் காணப்பட்டது. | நிர்மாணத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் காணியை அரசாங்கத்திற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கிராம சக்தி நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து வாழ்வாதார அபிவிருதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்திலிருந்து மின்சாரத்தை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மின்சாரப் பட்டியல்களுக்கு பணம் செலுத்தும் பொறுப்பு இதனைப் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளும் குழுவிற்கு ஒப்படைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | ஏலத்தில் விற்பனை செய்வதற்கு உத்தேசித்துள்ள 25 வாகனங்கள் 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாமதமின்றி இவ் வாகனங்களை கைதவிர்ப்புச் செய்தல் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2019 மே 02 ஆந் திகதி வரை வாகனங்களை கைதவிர்ப்புச் செய்வதற்காக அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் கிடைக்கவில்லை. வாகன கைதவிர்ப்புச் சம்பந்தமான ஆரம்ப நடவடிக்கைகள் அனைத்தும் முடிவடைந்துள்ளதுடன் கைதவிர்ப்புக்காக மீண்டும் ஒரு தடவை அங்கீகாரத்தை வேண்டி 2019 மே 02 ஆந் தகிதி கடிதம் அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

**3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| மல்லவபிடிய பிரதேச செயலகத்திற்குரிய மொஹொத்தவ கங்உருலேவ குடிநீர் திட்டத்திற்காக 2015/2016 ஆண்டின் போது ரூபா 783,245 மொத்த தொகை செலவு செய்து குழாய்க் கிணறு நிர்மாணிக்கப்பட்டிருந்தும் நீர்த் தாங்கியை நிர்மாணித்தல், விநியோய குழாய்களை அமைத்தல், மூன்று வழி மின்சாரத்தை பெற்றுக்கொள்ளல், நீர் பம்பிகளைப் பெற்றுக்கொள்ளல், பொருத்துதல் என்பன செய்யப்படாததன் காரணமாக செயற்திட்டத்தின் எதிர்பார்த்த குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் செயற்திட்டத்தை முழுமையாகப் பூர்த்தி செய்வதற்கு நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக்கொள்ளக் கூடிய முறைமை தொடர்பாக கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். | இச் செயற்திட்டத்திற்காக 2016/2017 மற்றும் 2018 ஆம் அண்டுகளில் வேண்டுகோள் விடுவிக்கப்பட்டிருந்தும் நிதி எற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |

### 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சேவையை கைவிட்டுச் சென்று 01-05 இற்கு மேற்பட்ட காலப்பகுதி கடந்திருந்தும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியிலும் தீர்த்துவைக்கப்படாத ரூபா 677,225 மொத்த தொகையான 06 கடன் மீதிகள் காணப்பட்டன. | அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பிணையாளர்களிடமிருந்து அறவீடு செய்யக்கூடிய கடனை அவர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கும் அவ்வாறு முடியாவிட்டால் சட்ட ஆலோசனையின் பிரகாரம் அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஆ) | 02 பிரதேச செயலகங்களில் மரணமடைந்த இரண்டு உத்தியோகத்தர்களால் செலுத்த வேண்டியிருந்த ரூபா 308,940 பணம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அறவிடப்படாது காணப்பட்டது. | அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சட்ட ஆலோசனைகள் கோரப்பட்டுள்ளன. ஒரு மீதி மாத்திரம் மரணப் பணிக்கொடையிலிருந்து அறவீடு செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | 02 பிரதேச செயலகங்களில் ஓய்வு பெற்ற 02 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 298,518 மொத்த தொகையான கடன் மீதி 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவீடு செய்யப்படாது காணப்பட்டது. | அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இளைப்பாற்றுப் பணிக்கொடையிலிருந்து அறவீடு செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள 05 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 319,679 மொத்த தொகையான கடன் மீதி 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இக் கடன் மீதிகள் 01 ஆண்டிற்கும் 18 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியாகக் காணப்பட்டன. | அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பிணையாளர்களிடமிருந்து அறவீடு செய்வதற்காக உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (உ) | 2018 ஆம் ஆண்டில் குருனாகல் மாவட்டத்தில் காட்டு யானைகளின் தாக்குதல்களால் இடம்பெற்ற 70 ஆதனம், உடல் மற்றும் உயிர் சேதங்களுக்காக ரூபா 3,923,795 மொத்த தொகையான இழப்பீட்டுப் பணம் வழங்கப்பட்டிருந்த போதிலும் | முடியுமான அளவு விரைவாக இழப்பீட்டினை வழங்கி இன்னல்களுக்கு உள்ளாகிய நபர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் | இழப்பீட்டுக் குழவிற்கு பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிப்பதனால் அக்குறைபாட்டினை பூரணப்படுத்துவதற்காக மீள அனுப்ப வேண்டி |

| | | | |
|---|---|---|---|
| | இழப்பீட்டினை கொடுப்பனவு செய்வதற்காக சேதம் இடம்பெற்ற திகதியிலிருந்து 06 மாதங்களுக்கும் 01 ஆண்டு 11 மாதங்களுக்கும் இடைப்பட்ட காலம் எடுத்திருந்தது. இழப்பீட்டுக் கொடுப்பனவு நடைமுறைக்காக அதிக அளவான காலம் எடுப்பதனால் இழப்பீட்டிற்கு உள்ளாகியவர்களுக்காக இழப்பீட்டினை வழங்குவிதிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட அரசாங்கத்தின் குறிக்கோள் நிறைவேற்றப்படுதல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | வேண்டும். | ஏற்பட்டதனால் தாமதம் இடம்பெற்றுள்ளது. |
| (ஊ) | கொடவெஹர பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள 50 ஏக்கர் வயல் காணிகளின் விளைச்சலுக்கு நீர் வழங்குகின்ற 04 குளங்கள் 2018 மே மாதத்தில் பெய்த அதிக மழையின் காரணமாக சேதமடைந்திருந்தும் அக் குளங்களைத் திருத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடைந்த குளங்களை நல்ல நிலைக்கு கொண்டு வருவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதற்காக கமநல சேவை திணைக்களத்திற்கு தெளிவு படுத்தப்பட வேண்டுமெனவும் அது சம்பந்தமாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் சிபார்சு செய்கிறேன் | இது சம்பந்தமாக கமநல சேவை திணைக்களத்திற்கு மாவட்ட செயலாளர் தெளிவுபடுத்தியிருந்தும் நிதி ஏற்பாடு கிடைக்கவில்லை. |
| (எ) | கைத்தொழில் மற்றும் வணிக நடவடிக்கைகள் அமைச்சினால் குருனாகல் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 10 பிரதேச செயலகப் பிரிவுகளின் 10 நிலையங்களில் சிறுகைத்தொழில் ஆபரண செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு ரூபா 122,264,445 பெறுமதியான இயந்திரங்களும் உபகரணங்களும் வழங்கப்பட்டிருந்தன. இச் செயற்திட்டத்திற்காக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் செயற்பாட்டுச் செலவாக ரூபா 3,776,180 செலவு செய்யப்பட்டிருந்தது.<br>இது சம்பந்தமாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன. | | |
| | (i) மாவட்ட செயலகத்தால் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட இடங்கள் மற்றும் நபர்கள் தொடர்பான விபரம் கைத்தொழில் மற்றும் வணிக நடவடிக்கைகள் அமைச்சின் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்டிருந்தும் அதற்கு மாற்றமான இடம் மற்றும் நபர்கள் கைத்தொழில் மற்றும் | செயற்திட்டத்தின் எதிர்பார்த்த குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காகவும் செலவு செய்யப்பட்ட பணத்திலிருந்து உச்ச அளவு நலன்களை அடைந்து கொள்ளக்கூடிய | இச் செயற்திட்டத்திற்குரிய 10 பயிற்சி நிலையங்களில் 08 பயிற்சி நிலையங்களை பதிவு செய்வதற்குரிய ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தற்பொழுது 07 |

| | | | |
|---|---|---|---|
| | வணிக நடவடிக்கைகள் அமைச்சின் செயலாளரால் தெரிவு செய்து அனுப்பப்பட்டதனால் ரூபா 138,290 மேலதிக மின்சாரச் செலவுகளை செலவு செய்வதற்கும் பயிற்சி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதில் தாமதமும் ஏற்பட்டிருந்தது. | வகையில் தற்பொழுது வெற்றியளிக்காத செயற்திட்டங்களை வெற்றி பெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் அரசாங்கத்தின் சொத்துக்களை பல்வேறு நபர்களுக்கு ஒப்படைக்கும் போதும் தொழில் முயற்சிகளை ஆரம்பித்து நடாத்திச் செல்லும் போதும் அவற்றை சட்டரீதியாக மேற்கொள்ள வேண்டுமெனவும் சிபார்சு செய்கிறேன். | நிலையங்களின் வேலைகள் வெற்றிகரமாக இடம் பெறுவதாகவும் அவற்றில் 05 நிலையங்களில் வியாபாரரீதியாக முறைப்படியாக கட்டளைகள் பெற்றுக்கொள்ளப்பட்டு அமுல்ப்படுத்தப்படுகின்றது. |
| | (ii) 06 மாத பயிற்சியின் பின்னர் சுய வலு தொழிற்சாலையாக செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தும் கணக்காய்வுத் திகதியான 2019 பெப்ரவரி 26 ஆந் திகதி வரை பொல்கஹவெல, குருனாகல், பண்டுவஸ்நுவர (மேற்கு), மஹோ, ரிதிகம மற்றும் உடுபத்தேவ ஆபரணத் தொழிற்சாலைகள் மூடப்பட்டு இயந்திரங்கள் செயற்பாடற்றுக் காணப்பட்டன. | | |
| (ஏ) | 2018 திசெம்பர் 31 வரை மாவட்ட செயலகத்தினாலும 14 பிரதேச செயலகங்களாலும் எழுதிய ஆனால் உரிய தரப்பினர்களுக்கு ஒப்படைக்கப்படாத ரூபா 15,291,872 பெறுமதியான காசோலைகள் 127 ஆகும். | பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கியதன் பின்னர் காசோலைகள் ஒப்படைக்கப்படுதல் வேண்டும். | ஆண்டின் இறுதியில் அபிவிருததி செயற்திட்டங்களின் நிருவாக செலவுகளிலிருந்து கொள்வனவுகளை மேற்கொண்டதன் காரணமாக வழங்குதல்களில் சிறிய தாமதம் ஏற்பட்டுள்ளது. தற்பொழுது கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் நிர்ணயிக்கப்பட்டவாறு பெற்றுக்கொள்ளப்பட்டு காசோலைகள் விடுவிக்கப்பட்டுள்ளன. |

## 4. நிறைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகத்தால் இனங்கண்ட நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களுக்குரிய் இலக்குகள் 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | நிலைபேறான குறிக்கோள்களுக்கான இலக்குகளை இனங்கண்டு அடைந்து கெள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்காக மிகவும் விரைவாக இலக்குகளைத் தயாரித்து முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | மாவட்ட செயலகத்தினால் இனங்காணப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் அதற்கிணங்க தயாரிக்கப்பட்ட இலக்குகள் நிறுவனத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான குறிக்கோள்களையும் இலக்குகளையும் நிறுவனத்தின் செயல் நடடிக்கைத்திட்டத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். | தற்பொழுது 2019 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களுக்குரிய இலக்குகளை இனங்கண்டு முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் அச்செயல் நடவடிக்கைகத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு திருத்தம் செய்வதற்கு எதிர்பார்க்கிறேன். |
| (இ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளும் போது உரிய செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கு தேவையான மையப் புள்ளிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக உரிய செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்குத் தேவையான மையப் புள்ளி இனங்காணப்படுதல் வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்காக மாவட்ட செயலகத்தில் திட்ட அமலாக்கல் பிரிவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 5. நல்லாட்சி

### 5.1 பொதுமக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| குருனாகல் மாவட்ட செயலகத்திலுள்ள இணைய தளங்கள் பொது மக்களின் முறைப்பாடுகளை பொறுப்பேற்கக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இணைய தளங்கள் பொது மக்களின் முறைப்பாடுகளை பொறுப்பேற்கக் கூடிய வகையில் தயாரிக்கப்படுதல் வேண்டும். | இணைய தளத்தில் காணப்படுகின்ற தொழில்நுட்ப குறைபாடுகளின் காரணமாக இது வரை பொது மக்களின் முறைப்பாடுகளை பொறுப்பேற்க முடியாதிருந்தது. |

## 6. மனித வளங்கள் முகாமைத்துவம்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| மாவட்ட செயலகத்திலும் பிரதேச செயலகங்களிலும் 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 219 ஆக இருந்ததுடன் அவற்றில் 21 ஆரம்ப மட்டத்திலும் 166 இரண்டாம் மட்டத்திலும் 28 மூன்றாம் மட்டத்திலும் 04 சிரேஷ்ட மட்டத்திலும் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வெற்றிடங்கள் சம்பந்தமாக அமைச்சு செயலாளருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. |